# இத்தாலிய தலைநகரில் எழுகிறது புரட்சி!

Phone No 4502
விலை அரை அணா
Regd. No. M. 5458
இலங்கை 5 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 ] சென்னை (25—3—50) வெளியீடு (26—3—50) [ இதழ் 204

## நாடெங்கும் அடக்குமுறை வலுக்கிறது

—(0)—

## வேலைநிறுத்தம் புயல் வேகமாகப் பரவுகிறது

### துப்பாக்கிப் பிரயோகத்துக்குக் கண்டனம்

### இத்தாலியும் சிவப்பாகிறதா ?

4000 போலீஸ்காரர்களுக்கும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களுக்குமிடையே பலத்த போராட்டம் ஏற்பட்டது. 5 போலீஸார் பலமாகத் தாக்கப்பட்டனர். மற்றும் 5 போலீஸாரிடமிருந்து துப்பாக்கிகள் பிடுங்கப்பட்டன.

சான்சேவரினோ நகரைச் சுற்றிப் போலீஸ் பாதுகாப்பு பலமாக இருந்து வருகிறது.

சுமார் 300 பேர் டவுன் ஹால் நோக்கி விரைந்து சென்று டவுன் ஹால் கட்டிடத்தை முற்றுகையிட்டனர். இதனால் மேயர் வெளியில்வர இயலாமல் சிறைப்பட்டிருக்க நேர்ந்தது. பின்னர், போலீஸார் உதவியுடன் மேயர் காரில் அவ்விடம் விட்டு அகற்றப்பட்டார்.

இது, இத்தாலியில் ரோம் நகரில் கடந்த வியாழக்கிழமையன்று தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதன் எதிரொலிகள்.

கடந்த சில நாட்களாகவே இத்தாலியில் தொழிலாளர் கிளர்ச்சி நடைபெற்று வருகிறது. அக்கிளர்ச்சி நாளுக்கு நாள் வலுவடைந்து கொண்டேயிருக்கிறது. அண்மையில் அந்நாட்டு விவசாயத் தொழிலாளர் போராட்டத்தில் ஈடுபட்டதை வாசகர்கள் அறிவர். அதனைத்தொடர்ந்தே இத்தகைய போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. போராட்டங்களை அடக்கப் போலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய ஆரம்பித்துள்ளனர். துப்பாக்கிப் பிரயோகம் போராட்டத்தை அடக்கிவிடும் என்பது போலீஸ் நினைப்பு போலும்! ஆனால், அதுதான் நடைமுறைக்கு ஒத்து வரும் வழக்கம் கிடையாதே! அதற்கு மாறாகப் போராட்டச் சக்திதான் அதிகரிப்பது வழக்கம்.

இந்த வழக்கத்தை—இயற்கைத் தன்மையை ஒட்டியே இன்றையத் தினம் இத்தாலியிலும் புரட்சிப்புயல் வீச ஆரம்பித்துள்ளது.

போலீஸார், துப்பாக்கிப் பிரயோகம் செய்தது தவறு என்பதைப்பொது மக்களுக்கு உணர்த்தும் முறையிலே—அரசியலாரின் அடாத செயலைக் கண்டிக்கும் முறையிலே கடந்த வியாழக்கிழமையன்று,—ரோம் நகரில் உள்ள தொழிலாளர் அனைவரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

போலீசார் வேலை நிறுத்தம் செய்த சிலரைக் கைது செய்தனர். உள்ளூர் கம்யூனிஸ்டு தொழிற்சங்க நிலையங்களைக் கைப்பற்றிக் கொண்டனர். இதற்கு அவர்கள் காட்டியுள்ள காரணம், இந்த வேலை நிறுத்தங்களுக்குக் கம்யூனிஸ்டுகளே காரணம் என்பதே யாகும். இங்ஙனம் போலீஸார் அட்டகாசம் அதிகரிக்கவே, கிளர்ச்சி வலுவடைந்தது. போலீசுக்கும் பொதுமக்கட்குமிடையே கைகலப்பு ஏற்பட்டது

தொழிலாளரின் இத்தகைய புரட்சி ரோம் நகரதில்மட்டுமின்றி இத்தாலி முழுவதிலும் பரவி இருந்ததாகத்தெரிகிறது. ஆனாலும் போலீஸாரின் திறமையால், அமைதி நிலை நாட்டப் பட்டிருப்பதாக சொல்லப்படுகிறது.

எது எப்படியிருந்தபோதி

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

# கன்னடத் தோழர்கள் கண்கலங்கி நிற்கின்றார்கள்

## கோவாவில் சலஜாரின் பாசிச ஆட்சி !

—(0)—

### ஆசிரியர் மேற்கு ஆப்ரிக்காவுக்கு கடத்தப்பட்டார்

பம்பாய், மார்ச். 23—

தோழர் திவாகர் காலிட்கார் என்னும் ஒரு ஆங்கிலப் பள்ளி ஆசிரியரை, கோவாவிலிருந்து கடத்தும்படி போர்ச்சுகல் அரசாங்கம் உத்திரவு பிறப்பித்துள்ளது.

நாட்டின் அமைதிக்கு இவர் பங்கம் விளைவிக்கிறவராக இருக்கிறாரென்பதே இவர்மீது சாட்டப்பட்டுள்ள குற்றமாகும். சோவியத் 'டாஸ்' செய்தி ஸ்தாபனத்துக்குத் தோழர் திவாக்கர் ஏஜெண்டாக இருந்தாராம்.

மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள 'வெர்டி முனை' என்னுமிடத்துக்கு இவர் கடத்தப்படுவார்.

இந்திய உபகண்டம் அன்னிய ஆட்சியிடமிருந்த அரசியல் சுதந்திரம் பெற்றும், திராவிட நாட்டில் உள்ள புதுச்சேரி காரைக்கால் தமிழ் பிரதேசங்களும், மலையாளத்திலுள்ள மாஹி என்னும் இடமும் பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்துமீட்கப்படவில்லை. ஆனால், வடநாட்டிலுள்ள சந்திரநாகூர் மட்டும் பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்து இந்நாட்டு அரசியலார் மீட்டிருப்பது திராவிட மக்களுக்குப் பெருந்திகைப்பைக் கொடுத்துள்ளது.

திராவிடத்தின் ஒரு பகுதியாகிய கன்னட நாட்டின் வளம் பொருந்திய கோவா, ஐரோப்பாவிலுள்ள குட்டியரசாங்கம் போர்ச்சுகலின் எதேச்சாதிகாரத்துக்கு ஆளாகி இருக்கிறது. மக்கள் சுதந்திர உணர்ச்சியின் சாயலைக் காட்டினால்கூட, உடனே கம்யூனிஸ்டுகளென்றோ, நாட்டின் விரோதிகளென்றோ அப்புறப்படுத்திவிடுகிறார்கள்.

கன்னடத் தோழர் திவாக்கர் மேற்கு ஆப்பிரிக்காவுக்குக் கடத்தப்படுவார் இதைக்கேட்க நாதியில்லை. ஆனால் இந்தோனேஷியாவின் சுதந்திரத்தைப் பாதுகாக்க டில்லியில் மாநாடு கூட்டவும், ஜப்பானியரின் உரிமைகளை இலங்கை மாநாட்டில் எடுத்துக்கூறவும் இன்றைய அரசியலார் தயங்கவில்லை. வெளிவேஷமா அல்லது திறமையான நிர்வாகமா என்பதை மக்கள்தான் நிர்ணயிக்க வேண்டும்.

போர்ச்சுகலில் ஆட்சி நடத்தும் சலஜார், ஹிட்லரையும் முஸோலினியையும் தோற்கடிக்கக்கூடிய ஆட்சி வெறிபிடித்தவன். நாடு சிறியதாயிற்றே, படைபலம் இல்லையே என்ற காரணத்தால்தான் அவன் அடங்கிக் கிடக்கிறான்.

### மலேயாவிலிருந்து இந்தியர் வெளியேற்றம்

சிங்கப்பூர், மார்ச். 22—

சென்ற ஆண்டு மலேயாவில் குடியேறிய இந்தியர்களின் தொகையைவிட வெளியேறியவர்களின் தொகை அதிகமென்று தெரிகிறது. மொத்தம் 38,396 இந்தியர் வெளியேறி இருக்கின்றனர். 32,152 இந்தியர் குடியேறி இருக்கின்றனர்.

சீனர்கள் எண்ணிக்கையும் குடியேறியவர்களைவிட வெளியேறினவர்களே அதிகம். ஆனால் ஐரோப்பியர்கள்: யூரேஷியர்கள் அதிகமாக குடியேறி இருக்கின்றனர்.

குடியேறியவர்களின் மொத்த தொகை 213,872. வெளியேறியவர்களின் மொத்த தொகை 247,974.

### பஞ்சாப் மெயிலைக் கவிழ்க்கச் சதி ?

காசி, மார்ச். 23—

பஞ்சாப் மெயிலில் பிரயாணம் செய்த பிரயாணிகள் வண்டி வேகமாகச் சென்று கொண்டிருந்தபோது, காசிக்கும் ஜஸ்காலுக்குமிடையில் திடீரென்று பெரிய அதிர்ச்சிக்குள்ளானார்கள்.

வண்டி ஓட்டி பெருமுயற்சி செய்து வண்டியை நிறுத்திப் பார்த்ததில் தண்டவாளங்கள் மீது வரிசையாக இரும்புக் கம்பங்களை வைத்திருந்தது தெரியவந்தது.

இது நாசவேலையா என்று விசாரணை நடத்தப்படுகிறது.

### பர்மாவின் புது நாணயங்கள்

ரங்கூன், மார்ச். 21—

பர்மாவில் புது நாணயங்கள் அச்சிடப்பட்டு வருகின்றன. இவ்வாண்டிற்கே அவை செலவாணிக்கு வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பொழுது இந்திய நாணயங்கள் பர்மாவில் செலவாணிக்கு அனுமதிக்கப்பட்டு வருகின்றன.

# நிலச்சுவான்தார்களின் கொட்டம் அடக்கப்படும்

## இதாலிய நிலச் சீர்திருத்தத்தின் பலன்

ரோம், மார்ச். 24—

இதாலிய சர்க்காரின் நிலச் சீர்திருத்த திட்டம் மூலம், 8000 பெரிய நிலச்சுவான்தார்களின் 30 லட்சம் ஏகரா நிலம் விவசாயிகளுக்குப் பங்கிட்டுத் தரப்படும் என்றும், இதனால் 300,000 குடும்பங்கள் பலனடையும் என்றும் ஆனால் முதல் இரண்டு முதல் நான்கு ஆண்டுகள் வரை, அவர்கள் நிலத்தின் பூரண சொந்தக்காரர்களாக ஆகமாட்டார்கள் என்றும் இதாலிய விவசாய மந்திரி கூறினார்.

### புதுச்சேரியில் வைரங்கள் விலை உயர்வு

காரைக்கால், மார்ச். 23—

வைரங்கள் மீது பிரெஞ்சு இந்தியாவில் இருந்த வரியை ரூபாய் 2—8—0-லிருந்து ரூபாய் 5—0—0 ஆகப் பிரெஞ்சு அரசாங்கம் உயர்த்திவிட்டது. இந்த உத்தரவு வெகு விரைவில் அமுலுக்கு வரும்.

ஆஸ்லோ, மார்ச். 24—

வடதுருவப்பிரதேசமான கேசுவிலண்ட் என்ற இடத்தில், முன்பு இருந்த ஓட்டலை மீண்டும் புதிதாக ஆரம்பித்து நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. (ஞோப்)

# சொந்த முயற்சியில் தமிழ்ப்பள்ளி நிறுவினர்

## சிங்கப்பூர் மாணவர்களின் எழுச்சி

சிங்கப்பூர், மார்ச். 22—

சொந்த நாட்டில் வயிற்றின் கொடுமையைத் தவிர்த்துக்கொள்ள முடியாமல், ரப்பர் தோட்டங்களில் கூலி வேலை செய்து பிழைக்க மலேயா சென்றுள்ள இந்தியர்கள் தமிழர்கள்தான். அவர்களுடைய உழைப்பின் பலனை உறிஞ்சும் நோக்கமே வெள்ளை முதலாளிகள் பெரிதும் கொண்டுள்ளனரே தவிர, அவர்களுடைய குழந்தைகளின் கல்விக்குப் போதிய வசதி செய்தே தரவில்லை.

ஆகையால் இனத்தால், மொழியால் கட்டுப்படுத்தப் பட்டுள்ள தமிழ் மாணவர்கள் தங்களுடைய சொந்த முயற்சியிலேயே ஒரு தமிழ்ப்பள்ளியைச் சமீபத்தில் நிறுவிக் கொண்டார்கள். அவர்கள் 10000 டாலர் (15000 ரூ.) வசூலித்ததுடன், அரசாங்கத்தையும் வற்புறுத்தி 6000 டாலர் (9300 ரூ ) பெற்றனர்.

தமிழ்க் குழந்தைகள் தங்களுடைய தாய் மொழியைக் கற்கவேண்டியதின் முக்கியத்துவத்தை தமிழ்க் கல்விக் கழகத் தலைவர் தோழர் சாரங்கபாணி விளக்கிக் கூறினார். தமிழ்க் கல்வி கற்பிக்கப் பெருந் தடையாக இருப்பது பணமுடைதானென்று அவர் அறிவித்தார். பல தமிழ்க் குடும்பங்களில் தமிழ்ப் பேசுவதோ, எழுதுவதோ இல்லையென்று அவர் வருத்தத்துடன் கூறினார்.

இவ்வாரத்தில் இப்பள்ளி ஆரம்ப விழாவுக்குத் தென்கிழக்கு ஆசியாவில் பிரிட்டிஷ் ஹைகமிஷனர் ஜனரலாக உள்ள தோழர் மால்காம் மெக்டனல்ட், சிங்கப்பூர் அரசாங்க நிர்வாகி சர் ஜெட்ரிக் மாக்கரம் வாழ்த்துச் செய்திகள் அனுப்பினார்கள்.

# மாலை மணி

சென்னை 25-3-50 சனிக்கிழமை


# நல்ல மருந்து!

"படாதபாடில்லை; பார்க்காத மருத்துவரில்லை; போகாத இடமில்லை. இன்னும் என்னென்னவோ செய்து பார்த்தாய்விட்டது. ஆனால் நோய் மட்டும் நீங்கியபாடில்லை" என்று நோயால் வருந்தும் ஒருவர் கூறிடக் கேட்டால், கேட்பவர் என்ன நினைக்கக் கூடும்.

'பாவம், அப்பாவி! நோயின் மூலகாரணமறியாமல் வேதனைப்படுகிறான்" என்றுதான் நினைப்பர். நினைப்பதோடு நிற்கமாட்டார் "தக்க வைத்தியரைக் கொண்டு, நன்றாகப் பரிசோதனை செய்து பார்க்கச் சொல்லுவதுதானே" என்றும் கூறுவர்.

இதுதான் பகுத்தறிவுவாதி ஒருவரிடமிருந்து பாடுபட்டும் பலன் காணாத நோயாளி, எதிர்பார்க்கக்கூடிய பதில்

அங்ஙனமே நமது ஆட்சியாளருக்கு, அவர்களுடைய ஆட்சி முறையில் காணப்படும் அலங்கோல நிலையை நீக்க, "ஆட்சியாளரே, ஏன் இங்ஙனம் அவதிப்படுகிறீர்? நாட்டின் நலிவுக்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதைக் கண்டறிந்து, முதலில் அதனை அகற்ற வழிகோலுங்கள்; அதுதான் முறை; அதை விடுத்து, அடக்குமுறையே நாட்டின் நலிவு தீர்க்கும் நல்ல மருந்து என்றெண்ணி, அதனை உபயோகப்படுத்தி நீவிர் கண்ட, அல்லது காணப்போகும் பலன்தான் என்ன என்றே கேட்பர்.

இன்றையத் தினம் இந்நாட்டு ஆட்சியாளர் அடக்குமுறைகளில் வைத்திருக்கும் நம்பிக்கை அளவிடற்கரியது. அஃதொன்றே நாட்டைக்காக்க வல்ல நல்ல மருந்து என்று நம்புகின்றனர். அந்த நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டே செயலாற்றியும் வருகின்றனர். கல்விக்குப் பணம் இல்லையே என்று கவலைப்படுவதைவிட, காவலாளர் தொகை பெருகவில்லையே, காவற்படைக்குச் செலவிட பணம் போதவில்லையே என்ற கவலைதான் நமது ஆட்சியாளர் உள்ளத்தில் குடிகொள்ள ஆரம்பித்திருக்கிறது.

இதற்கு எடுத்துக்காட்டுகள் வேண்டுமெனில், இந்திய அரசாங்கம் ராணுவத்திற்கென செலவிடும் தொகையையும், மாகாண அரசாங்கங்கள் போலீஸ் இலாகாவுக்குச் செலவிடும் தொகையையும் பார்த்தாலே போதும். இந்திய அரசாங்கம் தனது மொத்த வருவாயில் சரிபாதிக்குமேல் இராணுவத்திற்குச் செலவிடுகிறது. நமது சென்னை மாகாணம் போலீஸ் இலாகாவின் செலவை அதிகரித்துக் கொண்டு போகிறது.

போலீஸ் இலாகா செலவுக்கென அரசாங்கம் 6,29,22000 ரூபாய் ஒதுக்கியுள்ளது என்று, அண்மையில் சென்னை சட்டசபையில் நிதி அமைச்சர் கோபாலர் தெரிவித்தார்

இங்ஙனம், ஆறுகோடிக்கு மேல் போலீசுக்கு அள்ளிக் கொடுத்துவிட்டு, பொதுமக்களைப்பார்த்து 'பொதுமக்களே உங்களனைவருடைய ஒத்துழைப்பின் பேரிலேயே, நாட்டின் அமைதியை நிலவச் செய்ய விரும்புகிறேன்' என்கிறார் அவர்.

இன்றைய நிலையில்போலீஸ் படைபலம் எதற்குப் பயன்படுகிறது என்பதை நாம் விளக்கத் தேவையில்லை. பாதுகாப்பு என்ற முறையிலே, ஆட்சிப்பீடம் அட்டங்காணும் விடுக்கச் செய்யப்பட்டுள்ள சட்டங்களை நிறைவேற்றித் தருவதற்கே போலீசும், ராணுவமும் பயன்பட்டு—அல்ல—பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இங்ஙனம், போலீசை, அவர்தம் துப்பாக்கியை, மற்றுமுள்ள அடக்குமுறைச் சாதனங்களை நம்பியே வாழவேண்டிய நிலைமையில் இருந்து வருகிறது இன்றைய ஆட்சிமுறை. இந்நிலை மாற வேண்டும்; அடக்குமுறை அகற்றப்பட்டு, அன்பு முறைத் தலையெடுக்க வேண்டும். அப்போதுதான் இன்றைய ஆட்சியை, ஜனநாயக ஆட்சி என்று சொல்ல முடியும்.

அதற்குச் செய்ய வேண்டுவது யாது? இதுதான் சிந்திக்க வேண்டிய விஷயம். நாட்டில் அன்பாட்சி முறை நிலை பெற வேண்டுமானால், நாட்டின் நலிவுக்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதைக் கண்டறிதல் வேண்டும். அதுவே நாட்டின் நலிவு தீர்க்கும் நல்ல முறை. இக்கருத்தினையே அண்மையில் சென்னை சட்டசபையில் பேசிய தோழியர் பேகம் அம்ருதீன், அரசாங்கம் போலீசுக்குச் செலவிடும் அதிகச் செலவு பற்றி பேசிய போது,

"இங்ஙனம் அரசியலார் போலீசுக்கென அதிகம் செலவிடுவதைப் பார்த்தால், அரசாங்கம் நாட்டு மக்களின் நன்னம்பிக்கையைப் பெறவில்லை, அடிப்படையிலேயே ஏதோ குற்றமிருக்கிறது என்பதையே காட்டுவதாகும். பொருளாதாரத்துறையில் காணப்படும் கொடுமைகளை அகற்றினால்,நாட்டில்தீமைகள் தாமாகவே குறைந்து போகும்"

என்று குறிப்பிட்டிருக்கிறார். அம்மையார் அடிப்படைக் காரணமறிந்து நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வகையிலே மருந்து கொடுக்க வேண்டும் என்று ஆட்சியாளருக்கு அறிவுறுத்துகிறார். அறிவுரை நல்ல அறிவுரைதான். ஆனால், ஆட்சியாளரின் செவியில் புகவேண்டுமே! புகுமா? ஆனால் புகவேண்டியது அவசியம். இன்றேல் போலீசுக்கு எவ்வளவு செலவிட்டாலும் அதனால் கோரிய பலன் கிட்டாது. நாட்டின் நலிவு தீர்க்கும் மார்க்கங்கள் அனைத்தையும் நாடி உழைக்க வேண்டியது. ஆட்சியாளர் கடன். இதற்கான நல்லெண்ணம் அவர்களுக்கு ஏற்பட வேண்டும். அதுவே அவர்களுடைய அடக்குமுறைப் பித்தம் தெளிய நல்ல மருந்தாகும். இந்த அறிவுரையே அவர்களுக்கு நாம் தர விரும்பும் நல்ல மருந்து!

## மெட்ரிகுலேஷன் தேர்வு விதிகளில் திருத்தம்

சென்னை, மார்ச். 21—

மெட்ரிகுலேஷன் (பரீட்சை) தேர்வு சம்பந்தமான சில விதிகளை சென்னை சர்வகலாசாலை சிண்டிகேட் திருத்தியுள்ளது. திருத்தம் பெற்றுள்ள விதிகளின்படி 1. மெட்ரிகுலேஷன் தேர்வுக்கு சென்னை சர்வகலாசாலை அங்கீகரித்துள்ள பள்ளிக்கூடங்களில்படிக்கும் மாணவர்கள் மெட்ரிகுலேஷன் தேர்வு எழுதலாம். சென்னை கல்வி இலாகா டைரக்டர் ஒரு பள்ளிக்கூடத்தை அங்கீகரிக்கவில்லை என்றால் அந்தப் பள்ளிக்கூடம் மெட்ரிகுலேஷன் தேர்வுக்கு மாணவர்களை அனுப்பக் கூடாதென்று பழைய விதியில் கூறப்பட்டிருந்தது. (2) தேர்வு எழுதும் ஆண்டில் மார்ச் முதல் தேதியன்று மாணவனுக்கு 14 வயது நிறைந்து 3 மாதங்கள் ஆகியிருந்தால் தான் அவன் தேர்வுக்கு உட்காரலாம். 4-வது பாரத்தில் சேர்ந்ததைத் தொடர்ந்து குறைந்தது, 3 ஆண்டோ அல்லது 1-வது உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்நிலைப்பள்ளியில் படித்திருக்க வேண்டும். ஆனால் கல்வி இலாகா டைரக்டரோ, அல்லது அவருக்கு சமமான அதிகாரியோ, அங்கீகரித்துள்ள பள்ளியிலிருந்து, டிரான்ஸ் சர்டிபிகேட் பெற்றிருந்தால் அம்மாணவனைப் பள்ளிக்கூட ஆரம்பத்தில் 5-வது பாரத்திலோ, அல்லது 6-வது பாரத்திலோ, சேர்த்துக் கொள்ளலாம். எஸ். எஸ். எல். சி பூர்த்தி செய்து ஒரு ஆண்டு கழித்துத்தான் யாரும் மெட்ரிகுலேஷன் தேர்வு எழுதலாம்.

## பிரிட்டனின் ஸ்டர்லிங் கடன்கள்

லண்டன், மார்ச். 24—

பிரிட்டனின் ஸ்டர்லிங்கடன்கள் தீர்க்கும் விஷயத்தில் யுனைடெட் ஸ்டேட்ஸ் ஒத்துழைப்பு கிடைக்கலாம் என்று யு. எஸ். நிதி வட்டாரங்களில் கூறப்படும் செய்தி இங்கு சிந்தனையைக் கிளப்பி விட்டிருக்கிறது.

இவ் விஷயமாக யுனைடெட் ஸ்டேட்ஸ் ஒரு திட்டமான முடிவுக்கு வந்திருப்பதாக கிழக்கு வர்த்தக பத்திரிகை ஒன்று கூறுகிறது.

## பெர்லினில் உண்ணாவிரத நோய்!

பெர்லின், மார்ச். 24—

பெர்லின் அகதிகள் முகாமில் போலந்து யூகோஸ்லாவியாவைச் சேர்ந்த 17 அகதிகள் ஒரு குடிசையில் உண்ணாவிரதம் ஆரம்பித்திருக்கின்றனர்.

சர்வதேச அகதி அதிகாரிகள் தங்களை மேற்கு ஜெர்மனிக்கு கொண்டு செல்ல வேண்டும் என்றும், ரஷ்ய ஏஜெண்டுகள் தங்களைக் கடத்திச் சென்று விடலாம் என்று தாங்கள் பயப்படுவதாகவும், இவர்கள் அறிவித்தனர். இக் கோரிக்கைக்குப் பெர்லின் நகர நிர்வாகிகள் இணங்க மறுத்துவிட்டனர்.

## பணமூட்டைகளிடம் பாசம் கொள்வதேன்?

—(0)—

## பாட்டாளிகள் புறக்கணிக்கப்பட்டால் அரசாங்கம் அழிந்துபடும்

—(0)—

### நிதி மந்திரி ஜான்மத்தாய்க்கு எச்சரிக்கை?

புதுடில்லி, மார்ச். 24—

'நான் மந்திரியாக இருக்கும்வரை நேரடி வரிவிதிப்பு எந்தக் காரணத்தை கொண்டும் குறைக்கமுடியாது' என்று நிதி மந்திரி டாக்டர் ஜான் மத்தாய் இன்று சட்டசபையில் கண்டிப்பாகக் கூறிவிட்டார். நேரடி வரிவிதிப்பு மூலமாகப்பாதிக்கப்படுகிறவர்கள் நிலைமைக்குத்தகுந்தவாறு மாறிக்கொள்ள வேண்டுமென்று அவர் வற்புறுத்தினார்.

எந்த அதிகாரியும் சொந்தமோட்டார் வாங்கிக்கொள்வது சம்பந்தமான மனுவைத் தன்னுடைய கீழ் அதிகாரிகள் ஏற்றுக்கொள்ளக் கூடாதென்றும், தானேதான் நேரில் பரிசீலனை செய்து அங்கீகாரம் கொடுக்க வேண்டுமென்றும் அவர் அறிவித்தார். உத்தியோக பூர்வமாகவோ அல்லது இல்லாமலோ எந்தத் தூதுகோஷ்டியும் அயல்நாடுகளுக்கு இப்பொழுது அனுமதிக்க முடியாதென்றும், அவசியமென்று தெரிந்திருந்தால் தான் நேரில் ஆராய்ந்து மந்திரிசபைக்குத் தெரிவித்தபின்பே செய்யவேண்டுமென்றும் டாக்டர் மத்தாய் கூறினார்.

இந்திய முதலாளிகள் தொழில் துறையில் இறங்க முன்வராத காரணத்தால்தான் அன்னிய முதல் உதவி தேடவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதென்று தோழர் மத்தாய் அறிவித்தார்.

### பிரிட்டன்மீது ஏன் காதல்?

சிறிசிர்வாகத்தைப் பற்றி அமெரிக்க, பிரிட்டிஷ் யோசனைகளை ஏற்று நடப்பதைவிட பாராளுமன்றத்தில் அங்கத்தினர் கூறும் ஆலோசனைகளுக்கே நிதிமந்திரி அதிக முக்கியத்வம் தரவேண்டுமென்று, டாக்டர் வி. தாஸ் (ஒரிஸா) அறிவித்தார். நாட்டுக்கு வேண்டிய இயந்திரங்கள் ஐரோப்பிய நாடுகளிலும், சோவியத் ரஷியாவிலும் வாங்க முயலவேண்டுமென்று அவர் குறிப்பிட்டார். "பிரிட்டன்மீது நம்முடைய அரசாங்கம் அதிகக் காதல் கொண்டுள்ளது. அமெரிக்கா மீதும் காதல் கொள்ள ஆரம்பித்துவிட்டது" என்று தோழர் தாஸ் கூறினார்.

"நாட்டின் பொருளாதாரம் சீர்குலைப் பெரிதும் காரணமாக இருக்கும் முதலாளிகளிடமே அதிக நம்பிக்கை கொண்டிருப்பதுடன், அவர்களுக்காகவே நிதிமந்திரி வரவு செலவு திட்டத்தைத் தயாரித்துள்ளார். இந்திய முதலாளிகள் பொதுமக்கள் நன்மையைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாததுடன் துரோக மனப்பான்மையுடனும் நடந்துகொள்ளுகிறார்கள். இதுபோன்ற சூழ்நிலைக்காரக் கூட்டத்தை நிதி மந்திரி நம்புவது வியக்கத்தக்கதாக இருக்கிறது" என்று தோழர் எ. என். ரத்தினசாமி பாராளுமன்றத்தில் கூறினார்.

ஏழைகளுக்கு நிதி மந்திரி இதுவரை ஒருவித நன்மையையும் செய்துதரவில்லை. இது அரசாங்கத்துக்கே அழிவு தேடிக்கொடுப்பதாக இருக்கலாம். தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்துக்கு இம்மியளவுகூட இதுவரை செலவழிக்கப்படவில்லை", என்று தோழர் ரத்தினசாமி அறிவித்தார்.

நாட்டுப்புறங்களுக்குத் தகுந்தகவனம் செலுத்தப்படவில்லை யென்று தோழர் எஸ். குருப்பா கூறினர்.

### "டார்சான்" ஆசிரியர் மறைவு

கலிபோர்னியா, மார்ச். 19—

"டார்சான்" கதையின் ஆசிரியரான திரு எட்கார்ரைஸ்பரோஸ் இன்று தமது இல்லத்தில் இயற்கை எய்தினர். அவருக்கு வயது 74.

## தி. மு. க. செயற்குழுக் கூட்ட நிகழ்ச்சி

சென்னை, மார்ச். 24—

திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் 24-3-50 மாலை 4 மணிக்கு சென்னை 'மாலை மணி' அலுவலகத்தில் நடந்தது. அதுபோது தோழர்கள் சி. என். அண்ணாத்துரை (பொதுச் செயலாளர்) எஸ் முத்து (மதுரை) எம் எஸ். சிவசாமி (தூத்துக்குடி) கே. ஏ. மதியழகன் (சட்டதிட்டக்குழு அமைப்பாளர்) காஞ்சிமணி மொழியார், (நிதிக்குழு செயலாளர்) என். வி. நடராசன் (அமைப்புக்குழுச் செயலாளர்) டி. எம். பார்த்தசாரதி (சென்னை) கண்ணபிரான் (சென்னை) ஜி. டி. சோமசுந்தரம் (பேட்டை திருச்சி) குமார தணிகாசலம், பொன்மலை ஜி பராங்குசம், குறிஞ்சிப்பாடி சாம்பசிவம், செங்கதாம்பாளையம் பழனிச்சாமி, ஈ. வெ அ. வள்ளிமுத்து (கோவில்பட்டி) வி. எம் ஜான் (நாஞ்சில்நாடு) குடந்தை கே. கே. நீலமேகம், சேலம் ஏ. சித்தையன், சி.பஞ்சாட்சரம், இரா.நெடுஞ்செழியன், ஆகியவர்கள்கலந்து கொண்டார்கள்.

தோழியர் சத்தியவாணி முத்து, தோழர்கள் வேலூர் சின்னராஜ், ஆசைத்தம்பி, அப்பாத்துரை, தர்மலிங்கம் ஆகியவர்கள் வரமுடியாதது குறித்து வருத்தம் தெரிவித்து எழுதியிருந்த கடிதங்கள் படிக்கப்பட்டது.

சென்னைத் தோழர் கே. கோவிந்தசாமி, பட்டுக்கோட்டை சௌரிராஜன் ஆகியவர்கள் பிரத்யேகமான அழைப்பின் பேரில் கலந்து கொண்டார்கள்.

தலைமைக் கழகத்துக்குக் கட்டிடம் வாங்குவது பற்றியும், தடை செய்யப்பட்ட நாடகங்கள் சம்பந்தமாக வழக்காடுவது பற்றியும், கழகத்தின் சட்டதிட்ட அமைப்பு பற்றியும் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

(விவரம் பின்னர் வரும்)

## இராக்கிற்கு உலக பாங்கி கடன் உதவி

பாக்தாத், மார்ச். 22—

இராக் தன் நீர்ப்பாசன திட்டங்களை நடத்தி வைப்பதற்காக கடன் உதவி அளிக்கத் தயார் என்று சர்வதேச பாங்கியிலிருந்து இராக் சர்க்காருக்குத் தகவல் கிடைத்திருப்பதாகத் தெரிய வருகிறது.

பாங்கி அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக மந்திரி நிதி மந்திரி தலைமையில் இராக் தூதுகோஷ்டி லண்டன் செல்லும் என்று தெரிகிறது.

# ஐ. நா.-வில் செஞ்சீனு இடம் பெறுவது கடினம்?

## லண்டன்வட்டாரக் கருத்து

லண்டன், மார்ச். 24—

ஐ நா.-வில் செஞ்சீனு சேரும் விஷயமாக ஏற்பட்ட தகராறைத் தீர்த்து வைக்க, பிரிட்டன் செய்யும் முயற்சிகள் எளிதில் பலன் தராது என்று, லண்டன் ராஜதந்திர வட்டாரங்களில் கருதப்படுகிறது.

பிரிட்டிஷ் சமரஸ திட்டம கிட்டத்தட்ட ஐ. நா. காரிய தரிசி ஜெனரல் டிரிகெவ்லே திட்டம் போலவே இருப்பதாகக் கூறப்படுகிறது.

எகிப்து, ஈக்வடார், க்யூபா இம்மூன்று பாதுகாப்புக் கௌன்சில் நாடுகளும் இன்னும் செஞ்சீனுவை அங்கீகரிக்கவில்லை. இந்நாடுகள் செஞ்சீனு ஐ.நா.வை எதிர்த்து வோட் செய்தன. இவை தன் போக்கை மாற்றிகொள்ளும் என்று தோன்றவில்லை.

இவைகள் மனம் மாறினுல் ஒழிய, பாதுகாப்புக் கௌன்சில் செஞ்சீனுவை அனுமதிக்கும் விஷயமாக மெஜாரிட்டி கிடைப்பது கஷ்டம்.

அத்துடன் அமெரிக்காவும், பிரான்ஸும் ஆதரிக்காது என்றும் தெரிகிறது. ஆனுல் இவை வீடோசெய்து முட்டுக்கட்டை போடாது என்று தெரிகிறது.

---

## செவ்வாய் கிரகத்தில் மனிதர்?

பறக்கும்தட்டுகளை அலட்சியமாக எண்ணுவதற்கில்லை. அது செவ்வாய்கிரகத்திலிருந்து அங்குள்ள மனிதர்களால் அனுப்பப்பட்ட ராக்கெட்டாகவே இருக்க வேண்டும் என்று 1939-ம் வருஷம் முதல் கொண்டு ராக்கெட் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வரும் அமெரிக்க நிபுணர் மெல்லர் வின் கூறுகிறார்.

இப்பொழுது செவ்வாய் கிரகத்தில் மனிதர்கள் வசிக்கும்படியான சாதக நிலைமை இருக்கவேண்டும் என்றும் அவர் கூறுகிறார். யுனைடெட் ஸ்டேட்ஸ் விமானப் படையினர் பறக்கும் தட்டுகள் இதர கிரகங்களிலிருந்து அனுப்பப்பட்ட ராக்கெட்டுகள் அல்ல என்று அறிவித்திருக்கின்றனர். -ருனோப்

---

## பறக்கும் தட்டுகள் பற்றிய தகவல்கள்

நியூயார்க், மார்ச். 24—

மெம்பிஸ் நோக்கிச் செல்லும் பறக்கும் தட்டு ஒன்றை விமானத்தில் சென்ற விமானிகள் கூடுமான வரையில் அருகில் கண்டதாக கூறப்படுகிறது. பறக்கும் தட்டு அவ்விமானத்தின் மேல் 1500 அடி உயரத்தில் பறந்து சென்றதாம்.

அந்த விமானிகளில் ஒருவர் கூறியதாவது:—

அது விசித்திர வர்ணமுடையதாக இருந்தது. அதன் உச்சியில் ஒளி பொருந்திய நீல வெளிச்சம் காணப்படுகிறது. கீழ்ப்புறத்தின் வெளிச்சத்துடன் காணப்பட்ட ஜன்னல்களிலிருந்து அது கட்டுள்ளதாக இருப்பது தெரிந்தது. அது 45 நிமிஷ நேரம் எங்கள் பார்வையிலிருந்தது. மணிக்கு 500 அல்லது 600 மைல் வேகத்தில் செல்வதாகக் கூறலாம்.

## இத்தாலிய . . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

லும், தற்போது இத்தாலியில் ஏற்பட்டிருக்கும் இத்தகைய கொந்தளிப்பு தொழில்உலகில் தோன்றியிருக்கும் எழுச்சி என்றே சொல்ல வேண்டும். அண்மையில் கிஸான்கள் போராட்டத்தில் ஈடுபட்டு, அதில் ஓரளவு வெற்றியும் கண்டு வருவதாகத் தெரிகிறது.

இங்ஙனம், தொழிலாளரிடையே தோன்றி வளர்ந்து வரும் எழுச்சியை அடக்க அதிகார வர்க்கம் தன்னாலானதையெல்லாம் செய்து பார்க்கிறது. அதிகார வர்க்கத்தின் அடக்குமுறைத் தாண்டவம்தான், ரோம் நகரக் கிளர்ச்சியாகக் காட்சி அளிக்கிறது ஆனுல், இத்தகைய அடக்குமுறைகளால் தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சியை ஒடுக்கிவிட இயலுமா என்பதுதான் சிந்திக்கவேண்டிய விஷயம்

சென்ற சில ஆண்டுகட்கு முன்னர், சீனுவில் இத்தகைய சிறு சிறுப் போராட்டங்களே அடிக்கடித் தோன்றியவண்ணமிருந்தன. ஆனுல் அதிகார வர்க்கம் அவற்றை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. இன்றையதினம் இத்தாலிய சர்க்கார், அங்கு உள்நாட்டில் தோன்றியிருக்கும் புரட்சியை எங்ஙனம் அற்பமானதாகக் கருதி அலட்சியப் படுத்தி வருகிறதோ, அதே போல்தான் அன்று சியாங் சர்க்காரும் சீனப் புரட்சியை அலட்சியப்படுத்தி வந்தது.

அதன் விளைவு என்னவாயிற்று? சீனு சிவப்பாயிற்று; சியாங்கே ஷேக்கின் முகவரி என்ன என்று கேட்கும் நிலை ஏற்பட்டது

எனவே, சுருங்கச் சொல்ல வேண்டுமானுல், இத்தாலி சீனுவாகிறது என்றுதான் சொல்ல வேண்டும். இப்பொழுது தொடர்ந்து நடைபெற்றுவரும் இத்தாலிய போராட்டம், விரைவில் முழு உருப்பெற்று, இத்தாலியைச் சிவப்பாக்கும் அளவுக்கு வரலாம்.

---

## பிரிஸ்பேனில் வேலை நிறுத்தம்

கான்பெர்ரா, மார்ச். 24—

பிரிஸ்பேனில் துறைமுகத் தொழிலாளர்கள் கம்யூனிஸ்டு தலைவரின் பேரில் ஆரம்பித்துள்ள வேலைநிறுத்தத்தை ஒடுக்க, வேலைநிறுத்தம் செய்பவர்களுக்கு ஒரு ஆண்டு கடுங் தண்டனை அல்லது பிரஷ்ட தண்டனை விதித்து ஒடுக்குவதென ஆஸ்திரேலிய சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது.

ஆஸ்திரேலிய பிரதமர் மென்ஸிஸ் இதைப் பற்றிக் கூறுகையில் கம்யூனிஸ்ட்ஸ்தாபனத்தைத் தடை செய்யும் உத்திரவு பிறப்பிக்க சிறிது கால தாமதம் ஆகிறதென்றும், அதற்கு முன் முந்திக்கொண்டு கம்யூனிஸ்டுகள் தொல்லை கொடுக்கிறார்கள் என்றும் இது தீவிரமாக ஒடுக்கப்படும் என்று அறிவித்தார்.

# இனி நடப்பவை

சென்னை:—சென்னைத் திருவள்ளுவர் கழகத்தின் சார்பில் தோழர் க. தங்கவேலன், பி. ஓ. எல். (ஆனர்ஸ்) அவர்கள், திருக்குறளில் — "இறைமாட்சி" என்னும் பொருள்பற்றிப் புரசை, லைக் கோற்றரன் தெரு, நகராண்மைக் கழகப்பள்ளியில் 26-3-50 ஞாயிறு மாலை 6-30 மணிக்குப்பேசுவார்கள்.

* * *

சைதாப்பேட்டை:— (சென்னை) இவ்வூர் தி. மு. கழகத்தின் உறுப்பினர்கள் கூட்டம் 26-3-50 அன்று காலை 9 மணிக்குக் கழகக் கட்டடத்தில் நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் வரும்படி அழைக்கப்படுகிறார்கள்.

* * *

சென்னை:-சேப்பாக்கம்டாக்டர்சி. நடேசமன்றத்தின்சார்பாக26-3-50 காலை 10 மணிக்கு கவிஞர் அ. கு. ஆதித்தர் அவர்கள் திருக்குறள் வகுப்பு நடத்துவார். இடம்:- சென்னை நகராண்மைக் கழக ஆண் பாடசாலை, பெல்ஸ்ரோட், சேப்பாக்கம்.

* * *

சென்னை:— (சூளை) இவ்வூர் மக்கள் மறுமலர்ச்சி மன்றத்தின் சார்பாக தோழர் க. தங்கவேலன் பி. ஓ. எல். (ஆனர்ஸ்) அவர்கள் திருக்குறளில் "அருள் உடைமை" என்னும் பொருள்பற்றி சூளை, வாத்தியார் கந்தப்பிள்ளைத்தெரு, நகராண்மைக் கழகப் பள்ளியில் 26—3—50 ஞாயிறு காலை 10 மணிக்குப் பேசுவார்கள்.

* * *

சென்னை:—தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் மாநாடு 25-3-50 அன்று முழுவதும் நடைபெறும். இடம், 131-79, செட்டு தாஸ் தெரு, சென்னை 1 (பிராட்வேயிக்கு அருகில்)

* * *

திருவொற்றியூர்:—(சென்னை) இவ்வூர் சித்த வைத்திய முதல் மாநாடு 25-3-50 அன்று மாலை 2 மணிக்கு ஆரம்பமாகும். இடம்: திருவொற்றியூர் (திருவொற்றியூர்) தாசீபுரம், சித்த ஆராய்ச்சிக் கழகம்.

* * *

மதுரை:— 26-3-50 ஞாயிறு மாலை 6-30-மணிக்கு மதுரை கிருஷ்ணராயர் தெப்பக்குளத்தில் இவ்வூர் தி. மு. கழகத்தின் சார்பில் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது எஸ். முத்து, எம். தம்பாச்சாமி, எம். எஸ். சிவசுவாமி, இரா. சு. தங்கப்பழம் ஆகியோர் பேசுவார்கள்.

---

## திருச்சி மாவட்ட தி. மு. கழகம்

### அறிவிப்பு

தோழர் கே. பி. சிற்றரசு அவர்களின் திருச்சி மாவட்ட சுற்றுப் பிரயாணம் ஏப்ரல் மாதம் 8-ம் தேதியுடன் முடிவுறுகிறது.

மேலும் பல ஊர்களில் கூட்டம் நடத்தித்தரவேண்டுமென்று வேண்டுகோள் வந்திருக்கிறது. அவைகள் காலம் தாழ்ந்து வந்தபடியால், அவைகளை அடுத்த சுற்றுப் பிரயாணத் திட்டத்தில் பூர்த்தி செய்து கொடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்
ஜி. பராங்குசம்
துணைச் செயலாளர்

---

## சிங்கப்பூரில் பெண் ஜூரர்கள்

சிங்கப்பூர், மார்ச். 23—

சிங்கப்பூரில் பெண்களை ஜூரர்களாக நியமிக்க அனுமதிக்கும் மசோதா ஒன்று சிங்கப்பூர் சட்டசபையில் கொண்டு வரப்பட விருக்கிறது. சிங்கப்பூரில் முனிசிபல் கௌன்ஸிலராக பெண்கள் இருந்து வருகின்றனர்.

## மனித உரிமைப் பட்டயம்

லண்டன், மார்ச். 24—

மனித உரிமைப் பட்டயம் வெகு சீக்கிரமே அமுல் நடத்தும் கட்டத்தை அடைந்துவிடும் என்று தான் நம்புவதாக ஐ. நா. மனித உரிமைக் கமிஷனில் இந்தியாவின் பிரதிநிதியான தோழியர் ஹன்ஸா மேத்தா ருனோப் நிருபருக்களித்த பேட்டியில் கூறினர்.

நியூயார்க் லேக் ஸக்ஸஸில் கூடும் இக்கமிஷன் கூட்டத்தில் கலந்து கொள்ள அவர் அமெரிக்கா செல்கிறார்.

அவர் மேலும் கூறியதாவது:— ஐ. நா. வுக்குத் தனிப்பட்டவர்கள் உரிமை விஷயமான புகார்களை மனுச் செய்து கொள்ளலாமா என்ற விஷயம் கமிஷன் கூட்டத்தில் விவாதிக்கப்படவிருக்கிறது. இந்த உரிமை அளிக்கப்படவேண்டும் என்பதை இந்தியா ஆதரிக்கிறது.

தனிப்பட்டவர்கள் மனுச் செய்யும் உரிமையை ஆஸ்திரேலியா பிரான்ஸ் ஆதரிக்கின்றன. பல்வேறு காரணங்களைக்கொண்டு ரஷ்யா, உக்ரைன், யூகோ, பிரிட்டன் இந்த யோசனையை எதிர்க்கின்றன.

## வ. உ. சி. கடற்கரை

சென்னை, மார்ச். 20—

சென்னை மண்ணடி தமிழ் முன்னேற்ற சேவா சங்கத்தின் சார்பாக ... சங்க ... ஓர் பொதுக்கூட்டம் 18-ந்தேதி நடைபெற்றது. கூட்டத்திற்கு தோழர் எம். கே. ... தலைமை வகித்தார். அதுபோது தோழர் எம். பி. தங்கசாந்தன் தமிழ் நாட்டின் மாபெரும் தலைவரும், ஆங்கிலேயரை எதிர்த்து கப்பலோட்டிய தமிழனுமாகிய வ. உ. சிதம்பரனாரின் நினைவாக, வடக்கு 'பீச்' ரோட்டிற்கு வ. உ. சி. கடற்கரை என்று பெயரிட வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்தார். அதை ஆதரித்துப் பலர் பேசினர். தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## மீன் பிடிப்போர் மாநாடு

பீரட், மார்ச். 24—

மத்யதரைக் கடல் மீன் பிடிப்பு சங்க மாநாடு ஏப்ரலில் நடைபெறவிருக்கிறது. இதை நடத்தும் இதாலிய சர்க்கார் எல்லா மத்ய கிழக்கு நாடுகளுக்கும் அழைப்பு அனுப்பியிருக்கிறது.

இம்மாநாட்டின் தேதி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை.

# 'தொழில் மசோதாக்கள் நிறைவேறினுல் தொழிலாளர் சங்கமே நசிந்துவிடும்'

## 'ஏப்ரல் 3-ந்தேதி மறுப்பு நாளாகக் கொண்டாடுக'

## தொழிலாளர் பிரதிநிதிகள் கூட்டு மாநாட்டிலிருந்து வெளியேறிய காரணம்

புதுடில்லி, மார்ச் 24—

சமீபத்தில் இந்தியப் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட தொழில் சங்க மசோதாவை எதிர்த்து, ஏப்ரல் 3-ந் தேதியை எதிர்ப்பு நாளாகக் கொள்வதென்று அகில இந்தியத் தொழில் சங்கக் காங்கிரஸ் முடிவு செய்துள்ளது.

தொழில் மந்திரி கூட்டிய முக்கூட்டு மாநாட்டிலிருந்து அகில இந்தியத் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் சென்ற புதனன்று வெளியேறி விட்டார்கள்.

மசோதாவில் தொழிலாளருக்குத் தொல்லை தரக்கூடியவற்றை விளக்கவே பேச்சில் கலந்துகொண்டதாகவும், அவ்வாறு செய்தபின் மாநாட்டை விட்டு வெளியேறிவிட்டதாகவும் விளக்கித் தொழில் சங்கத் தலைவர் தோழர் வி. சக்கரைச் செட்டியார் அறிவித்தார். இம் மசோதா நிறைவேறினுல் தொழில் சங்க இயக்கமே நசிந்துவிடுமென்று அவர் கூறினுர்.

"தொழிலாளிகள் ஒன்றுபட்டு நிற்பதையும் வேலைநிறுத்தம் செய்வதையும் இம்மசோதா தடுக்கிறது மேலும் தொழிற் சங்கங்கள் நூற்றுக்கணக்கில் பதிவு உரிமையை இழப்பதுடன், சட்ட விரோதமான ஸ்தாபனங்கள் ஆகிவிடும். தொழிலாளரின்குறைகளை எடுத்துக்கூறும் அதிகாரமே சங்கங்கள் இழந்துவிடும்" என்று தோழர் சக்கரைச் செட்டியார் அறிவித்தார்.

தொழில் உறவு மசோதாவையும், தொழிற் சங்க மசோதாவையும் உடனே வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும், ஒன்றுபட்டு நிற்கவும், வேலை நிறுத்தம் செய்யவும், தங்கள் இஷ்டப்படி தொழிலாளிகள் அரசியல் கொள்கை உடையவர்களாக இருக்கவும் அனுமதிக்க வேண்டுமென்றும் தோழர் சக்கரை செட்டியார் அறிவித்தார்.

அகில இந்தியத் தொழில் சங்கத்தில் 8,60000 அங்கத்தினர் உள்ளனரென்றும் 600 சங்கங்கள் அதனுடன் இணைந்திருக்கிறதென்றும் தோழர் செட்டியார் கூறினுர்.

## கோவை மாவட்ட தி. மு. க. கிளைகளுக்கு அறிவிப்பு

ஏற்கனவே அறிவித்திருந்தபடி மாவட்ட செயற்குழுக் கூட்டம் 26—3—50-ல் நடைபெறுவதை நீக்கி கிளைக் கழகங்கள் 31—3—50 வரை கழக உறுப்பினர்களை சேர்க்கவேண்டியிருப்பதை முன்னிட்டு 2—4—50-க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை, இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

கிளைக் கழகங்கள் 31-3-50க்குள் உறுப்பினர்களைப் பெருவாரியாக சேர்க்க முயற்சி எடுத்து சேர்ப்பதுடன் 2-4-50க்குள் சேர்த்துள்ள உறுப்பினர் சீட்டுகளின் அடிக்கட்டைகளையும், மாவட்ட - மத்திய கழக சந்தா தொகைகளையும் மாவட்ட கழகத்துக்கு எந்தவிதமான தாமதமுமின்றி அனுப்பிவைக்கவும்.

2—4—50-ல் நடைபெறும் மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் மாவட்ட செயற்குழு உறுப்பினர்களும் கிளைக் கழகங்களின் செயலாளர்கள், பொருளாளர்கள், விளம்பரச் செயலாளர்கள் அனைவரும் கலந்துகொள்ளும் முறையில் கூட்டம் நடைபெறும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

துணைச் செயலாளர்,
சே. அ இராசமாணிக்கம்

---

## பிரிட்டிஷ் இசைக்கலை

லண்டன், மார்ச். 24—

1951-ல் நடைபெறவிருக்கும் பிரிட்டனின் விழா வைபவத்தை யொட்டி 30 தொகுதிகள் கொண்ட பிரிட்டிஷ் சாஸ்திரீய சங்கீத புத்தகங்கள் வெளியிடப்படும். இது 'மியூஸிகா பிரிட்டானிகா' என அழைக்கப்படும்.

# நாட்டு நடப்பு

### மறுமலர்ச்சி மன்றம்

மதுரை, மார்ச். 20—
இம்மன்றத்தின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் 18-3-50 அன்று நடைபெற்றது. அதுபோது செயற்குழு கீழ்கண்டவாறு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்— பச்சையப்பன்; பொருள் உறுப்பினர்—ஊ. சுந்தரம்; வி. உறுப்பினர்— இரா. நடராசன். மற்றும் ஒன்பது நிர்வாகக்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### தட்சிணமாறநாடார் சங்கம்

திருநெல்வேலி, மார்ச். 20—
டை சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் 18-3-50 ல் தோழர் பி. எஸ். ராஜாபலவேசமுத்து அவர்கள் தலைமையில், திருநெல்வேலி தலைமை ஆபீஸில் கூடியது. ராமநாதபுரம் திருநெல்வேலி ஜில்லாக்களில் ரோடு ஓரங்களில் பதனீர் விற்பவர்களுக்கும் லைசன்ஸ் இல்லாமல் பதனீர் விற்பவர்களுக்கும் கடுமையான தண்டனை விதிக்கப்பட்டு லைசென்சுகள் ரத்து செய்யப்பட்டு, தொழில் பாதிக்கப்படுவதை ஆட்சேபித்து சென்னை சர்க்காருக்குத் தெரியப்படுத்தி ஆவன செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

2, 18-2-50 டை சங்கத்தின் கூட்டத்தில் தீர்மானித்தபடி பனைவரி ரத்து செய்யவேண்டுமென்றும், பதனீர் கருப்புக்கட்டி உற்பத்தியாளர்கள் விஷமமாய் மதுவிலக்கு சட்டத்திலே பாதிக்கப்படுகிறவர்களை நிவர்த்திக்கவேண்டுமென்று அரசாங்கத்திற்கு தெரிவிப்பதல்லாமல் தக்க நடவடிக்கை எடுக்கும்படி சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

### ஐக்கிய வைத்திய சங்கம்

கும்பகோணம், மார்ச். 20—
டை சங்கத்தின் ஆதரவில் 19—3—50 மாலை குடந்தை கோர்ட்டர் டவுன்ஹாலில் மாதாந்திரக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்குத் தஞ்சை சரஸ்வதிமகால் ஆராய்ச்சிப்பண்டிதர் தோழர் எஸ். வெங்கடராஜன் எல். ஐ. எம். அவர்கள் தலைமைவகித்தார். அதுபோது கீழ்கண்ட தீர்மானங்கள் எல்லோராலும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வைத்தியவள்ளல் ஈ. வே. கி. அவர்கள் மறைவுக்கு இக்கூட்டம் வருந்துவதுடன், அன்னார் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்ளுகிறது.

தோழர் ஆர். எஸ். மணி அவர்களால் தயாரிக்கப்பட்ட டாக்டர்களுக்கோர் அப்பீல் வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. காரியதரிசியால் தயாரிக்கப்பட்ட சட்ட விதிகளை ஒப்புக்கொள்ளப்பட்டது.

சங்கத்தை ரிஜிஸ்டர் செய்யசெலவாகும் செலவுகளுக்கு நன்கொடை மூலம் வசூலிக்க காரியதரிசிகளுக்கு அதிகாரமளிக்கப்பட்டது. தலைவர் முடிவுரைகூறகூட்டம் முடிவுற்றது.

### சீர்திருத்த நடிக மன்றம்

குளாலம்பூர், மார்ச். 12—
10-3-50 இரவு சுமார் 10-30 மணிக்கு இவ்வூர் சீர்திருத்த நடிக மன்றத்தாரால் "பகுத்தறிவுவாதி" என்ற நாடகம் நடிக்கப்பட்டது. முதலில் நடிக மன்றக்குழுவினரால் தோழர்கள் கே. அர்ச்சுனன், எம். எம். அப்பாத்துரை, டபுள்யூ. எஸ். சின்னக்கண்ணு, எம். துரைசாமி, மண்ணுசாமி, ஆகியோருக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டது. பிறகு தோழர் ர. கணேசன், அவர்கள் தலைமைவகித்து சொற்பொழிவாற்றினர். கடைசியாக மெ. அண்ணாமலை நன்றிகூற நாடகம் இனிது முடிவுற்றது.

வெளியூர்களிலிருந்து 10,000க்கு மேற்பட்ட மக்கள் வந்திருந்தனர். மக்கள்மிக்க உற்சாகத்துடனும் அமைதியுடனும், நடையிவ்வாறில் கண்டு களித்தனர். போளூரிலிருந்து வந்த வாழ்த்துச் செய்தி படித்துக் காண்பிக்கப்பட்டது.

### "சைபால்" கம்பெனிக்கு பெங்களூரில் முதற் பரிசு

மதுரை, மார்ச். 22—
பெங்களூரில், சுபாஷ் நகரில், பெங்களூர் காங்கிரஸ் கமிட்டியின் ஆதரவில் பிப்ரவரி 3ம் தேதி முதல் மார்ச் 5-ந் தேதி முடிய நடைபெற்ற காங்கிரஸ், பொருட் காட்சியில், மதுரை, "சைபால்" கம்பெனியின் மருந்து தயாரிப்புகளைப் பாராட்டி, பொருட்காட்சி பரிசளிப்பு விழாவிற்குத் தலைமை தாங்கிய ப்ரொபஸர் டாக்டர் மேற்படி கம்பெனியாருக்கு முதற்பரிசாக தங்க மெடல் சர்டிபிகேட் ஒன்றும் வெள்ளிகப் ஒன்றும் பரிசளித்தார்.

காஷ்மீர் பிரதமர் ஷேக் அப்துல்லா; நிஜலிங்கப்பா, மரியப்பா இன்னும் இதர மந்திரிகளும் மேற்படி கம்பெனியின் ஸ்டாலுக்கு வந்திருந்தனர்.

### வேலாயுதனர் படிப்பகம் திறப்பு விழா

ஆரணி, மார்ச். 18—
சனிக்கிழமை மாலை வள்ளலார் கூடத்தில் தோழர் சி. வி. எம். அண்ணாமலை அவர்கள் தலைமையில் தோழர் "அருணன்" அவர்களால் மறைந்த மாவீரர் வேலாயுதனர் படிப்பகம் திறக்கப்பட்டது.

அன்று மாலை மேல் ஆரணிப் பாளையம் வேலாயுதம் மைதானத்தில் தோழர் அ. கி. இராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில், மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது தோழர்கள் த. அ. சிக்கண்ணன் டி. டீ, அரசு ஆகியோர் மிக விரிவாகப் பேசிய பின், பெரியார் ஈ. வே. ரா. படத்தை, வாழ்வுடை தோழர் வி. எஸ். கிருஷ்ணசாமி அவர்கள் திறந்து வைத்தார்.

வேலாயுதனர் படத்தை, சி. வி. எம். அண்ணாமலை அவர்கள் அவர் தொண்டைப்பற்றி நீண்ட நேரம் தெளிவாகப் பேசி, படத்தைத் திறந்து வைத்தார்.

தோழர் அண்ணாத்துரை படத்தை, ஆரணி தோழர் சி. வி. குப்புசாமி அவர்கள் திறந்து வைத்தார். பிறகு சிக்கண்ணன் நன்றிகூறகூட்டம் இனிது முடிவுற்றது.

### சூலூர் சொற்பயிற்சிக் கழகம்

சூலூர், மார்ச். 12—
6-3-50 இரவு கழகக் கட்டிடத்தில் தோழர் எஸ். பி. வேலுச்சாமி தலைமையில் 'புரட்சி' என்ற தலைப்பில் உறுப்பினர் பலர் பேசிய பின், செயலாளர் எஸ்.என். அருணாசலம் நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

### சர்வ கட்சிப் பொதுக்கூட்டம்

அறந்தாங்கி, மார்ச். 12—
சேலம் சென்டிரல் ஜெயிலைக் கண்டிக்க, தி. மு. கழகம், திராவிடர் கழகம், சோஷலிஸ்ட் ஜனநாயகட்சி, இவற்றின் சார்பில் 5—3—50 ஞாயிறு அறந்தாங்கி சிதம்பரம் திடலில், ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் எஸ். கலந்தர் ராவுத்தர் தலைமை தாங்கி சேலம் சிறையில் 22 பேர்சொல்லப்பட்டுள்ள துப்பாக்கிமேல் காரம் அடைபும் செய்ய நடத்தலைக் கண்டித்து, வெளி விசாரணை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வந்த தீர்மானத்தை, தோழர்கள் ஜி. கிருஷ்ணசாமி (காங்கிரஸ்) இரா. தலைவாசன், (தி. க.) க. வெங்கடநாதன் (தி. க.) சி. சுப்பையா (சோஷலிஸ்ட்) ப. மாரிமுத்து (சோஷலிஸ்ட்) ப. நடராசன் (தி.மு.க.) சுப. சதாசிவம் (தி.மு.க.) தெ. பாலகிருட்டினன் (தி. க.), ஆகியோர் ஆதரித்து விரித்துரைத்துப் பேசிய பின், கூட்டம் இரவு 9 மணிக்கு இனிது முடிந்தது.

## யானைக்கால் நோய் பரவாதிருக்க புதிய வழி

### சென்னை ஆராய்ச்சியாளர் கூறும் விவரம்

சில விதமான கொசுக்களால் ஏற்படும் யானைக்கால் வியாதியைத் தடுக்க மேனாட்டில் ஆராய்ச்சி செய்து ஒருவழி கண்டுபிடித்திருப்பதாக சமீபத்தில் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் ஆராய்ச்சி ஸ்தாபனங்களில் ராக்பெல்லர் ஆதரவின் கீழ் கொசுக்களைப்பற்றி சேர்ந்தாற்போல மூன்று ஆண்டு ஆராய்ச்சி செய்து தோழர் எஸ். சுந்தராமன் குளோப் நிருபரிடம் கூறினார்.

இப்பொழுது தோழர் சுந்தராமன் சென்னை சர்க்கார் சுகாதார இலாகா 'மலேரியா லேபரிடரியில் "என்டமாலோஜிஸ்ட்". பதவியை வகிக்கிறார். அவர் மேலும் கூறியதாவது:—

யானைக்கால் பரவச் செய்யும் கொசுக்கள் உலகத்தில் இரண்டு வகை இருக்கின்றன. இமயமலையிலிருந்து மத்திய தரைக்கடல் வழியாக ஒரு கோடு இழுத்தால், அதின் வடக்கிலுள்ள நாடுகளில் காணப்படும் கொசுக்கள் ஒருவகை இக் கோட்டிற்குத் தென்பாகத்தில் இருக்கும் நாடுகளில் (இந்தியாவும் ஒன்று) காணப்படுவது மற்றொரு வகை, இவைகளுக்கு "குலெக்ஸ் பிபியன்ஸ்" என்றும் "குலெக்ஸ் பாடிகன்ஸ்" என்றும் பெயர். இவை இரண்டையும் கூட செய்து புது வர்க்கம் ஏற்படுத்த முயற்சி செய்தால் யானைக்கால் பரவச்செய்யும் சக்தி அப் புது கொசுக்களுக்கு குறைந்துவிடும்.

இவ்விரண்டு வகைகளும் அனேக விதங்களில் ஒன்று போலக் காணப்பட்டாலும் சில நுட்பமான விஷயங்களில் அவைகளில் வித்யாசங்கள் காணப்படுகின்றன. ஆனால் அவைகள் பூமியின் வட பாகத்திலும் தென் பாகத்திலும் விருத்தியாவது ஒரு ஆச்சரியமான விஷயம் இவைகளைப்பற்றிய ஆராய்ச்சி அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் அதிகப் பணம் செலவிட்டு நடைபெறுகின்றது.

கத்தாழை அடியோடு அழிக்க ஆஸ்திரேலியாவிலிருந்து சிறு அளவில் "கொசினியல்" என்ற பூச்சி இங்கு கொண்டு வரப்பட்டன. அவைபெருகிவிட்டதால் கத்தாழை இலை இரண்டும் இல்லாமல் போகிவிட்டன. அதே போல் இவ்விரு இனசு கொசுக்களின் கூட்டுறவால் ஏற்படும் புதுக்கொசுக்கள் மூலம் யானைக்கால், மலேரியா போன்ற கொசுக்களினால் ஏற்படும் வியாதியை ஒழிக்க புது சாத்யம் என்று தோழர் சுப்ராமன் முடிவில் கூறினார்.

## பிரிட்டிஷ் - எகிப்து பிரச்னைகள்

கெய்ரோ, மார்ச். 22—
பிரிட்டிஷ் எகிப்து பிரச்னைகளை தீர்த்துவைப்பதற்கான பேச்சு வார்த்தைகளை இப்பொழுது நடத்துவதா, அல்லது பின்னர் நடத்துவதா என்பது லண்டனிலுள்ள எகிப்து ஸ்தானீகர் அம்பாஷடர் அனுப்பும் ரிப்போர்ட்டை பொறுத்தது என்று கூறப்படுகிறது.

எகிப்திலுள்ள ஒரு கோஷ்டியினர் இப்பொழுதே பேச்சு வார்த்தையை நடத்தி முடித்துவிடவேண்டும். தொழிற்கட்சி அதிகாரத்திலிருக்கும்போதே செய்துமுடிப்பது நல்லது என்று கூறுகிறார்கள். மற்றொரு கோஷ்டியினர் தொழிற்கட்சி மெஜாரிட்டி குறைவாக இருப்பதால் கம்யூனிஸ்ட் தயவை தொழிற்கட்சி எதிர்பார்த்து இருக்கிறதென்றும், கன்சர்வேடிவ்கள் எகிப்து விஷயமாக என்ன நோக்கம் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரியவேண்டும் என்றும் பிரிட்டனில் பலமான சர்க்கார் ஏற்பட்டபின் பேச்சு வார்த்தை நடத்திக்கொள்ளலாம் என்றும் கூறப்படுகிறது.

## தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

**26-3-50**

**மதுரை:—** எஸ். முத்து, எம். அய்யாச்சாமி, எம். எஸ். சிவசாமி, இரா. சு தங்கப்பழம்.
**துறையூர்:—** சி. பி சிற்றரசு, எஸ். நெடுமாறன்.
**கோபிச்செட்டிப்பாளையம்:—** என். வி நடராசன். ஜி. என். ராஜூ
**தூத்துக்குடி:—** தி. வயணப்பெருமான், எம். எஸ். இராமசாமி, எஸ். லிங்கன்

**27-3-50**

**கரூர்:—** சி. பி. சிற்றரசு, எஸ். நெடுமாறன், அம்பில் தர்மலிங்கம்.

**28-3-50**

**புகளூர்:—** சி. பி. சிற்றரசு; அம்பில் தர்மலிங்கம்

## மலான் சர்க்கார் தோல்வி

கேப்டவுன், மார்ச். 24—
பாஸ்போர்ட் மறுப்பு விஷயமாக அப்பீல் செய்யப்பட்ட இரு வழக்குகளில் தீர்ப்பு மலான் சர்க்காருக்கு விரோதமாக இருக்கிறது. இதில் ஒரு வழக்கு டாக்டர் டாடூவினுடையது.

கோர்ட் அளித்துள்ள தீர்ப்பில் பாஸ்போர்ட் இழக்கிருந்தாலோ அல்லது தவறாகப் பதிவு செய்யப்பட்டிருந்தாலோ அதை ரத்து செய்யலாமே ஒழிய, இருக்கும் சட்டத்தின் மூலம் மந்திரி அதை ரத்து செய்யும் அதிகாரம் இல்லை என்று கூறியிருந்தது.

மலான் சர்க்கார் இதன்பேரில் பாஸ்போர்ட் மசோதா ஒன்றைத் தயாரித்து வருகின்றனர். மந்திரி கஷ்டப்பட்டால் பாஸ்போர்ட்டை திரும்பிக் கேட்கவோ அல்லது ரத்து செய்யவோ அதிகாரமளிக்க ஷரத்து இம்மசோதாவில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த செஷனிலேயே இம்மசோதா கொண்டு வரப்படுமாம்.

### சென்னைக்கு மத்ய பிரதேச அரிசி

சென்னை, மார்ச். 24—
மத்ய பிரதேச யூனியனிலிருந்து வரவிருக்கும் 5,000 டன் அரிசியில், 2000 டன் புழுங்கலரிசி மலையாள ஜில்லாவிற்கும், 3,000 டன் பச்சரிசி விசாகப்பட்டணத்திற்கும் அனுப்பும்படி சென்னை சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர்

## பொழுதுபோக்கு

**தமிழ்**

| | | |
|---|---|---|
| இரௌன் | — | வேலைக்காரி |
| திருமகள் (சைதை) | | வாழ்க்கை |
| கோஹினூர் | — | ,, |
| லட்சுமி | — | ,, |
| பாரகன் | — | ,, |
| பிராட் | — | விஜயகுமாரி |
| சரஸ்வதி | — | ,, |
| கெயிட்டி | — | ,, |
| சன் | — | ரத்னகுமார் |
| இனிமாசெண்ட்ரல் | — | ,, |
| கமலி | — | உத்தமபுத்திரன் |

**தெலுங்கு**

| | | |
|---|---|---|
| பிராட்வே | — | குணசுந்தரி |
| வெலிங்டன் | — | ,, |

**ஹிந்தி**

| | | |
|---|---|---|
| சாகர் | — | சோகச் ராத் |
| அசோக் | — | டாடர் |
| ஸ்டார் | — | அலேகா மீனார் |
| சயானி | — | சனைப்ரே-தின் |
| செலக்ட் | — | ஷப்னம் |

**ஆங்கிலம்**

| | | |
|---|---|---|
| Casino | — | Holiday Affair |
| Minerva | — | The Countess of Monte Christo |
| Midland | — | Julia Misbehaves |
| New Globe | — | The Goldwyn Follies |
| New Elhinstone | — | Red Light |
| Roxyp | — | Silver River |

## நகரில் வீடு நெருக்கடி

### அரசாங்கத்தின் மௌனத்துக்குக் கண்டனம்

தண்டையார்ப்பேட்டை கார்பொரேஷன் நகர் குடிவாசிகள் சங்கத்தின் முதலாண்டு விழா தோழர் டி. செங்கல்வராயன் தலைமையில் நடத்தப்பட்டது.

தோழர் கெ. பார்த்தசாரதி நாயக்கர் பேசுகையில் ஏழைமக்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த நகராண்மைக் கழகம் வேண்டுவன செய்யுமென்று தான் நம்புவதாகக் கூறினார்.

டாக்டர் அழகிரிசிங்கார நாயுடு பேசுகையில் 1939 ல் 7,00,000 ஆக இருந்த நகர ஜனத்தொகை பத்தாண்டுகளில் இரண்டு பங்காகி இருக்கிறதென்று கூறினார். 1939 ல் நகரிலிருந்த வீடுகள் எண்ணிக்கை 60,000 ஆனால் இந்தப் பத்தாண்டுகளில் அதிகரித்துள்ள வீடுகள் 6000 தான். இந்த வீடுகள் தனிப்பட்டோராலோ அல்லது நகராண்மைக்கழகத்தாராலோதான் கட்டப்பட்டவை. அரசாங்கம் நகராண்மைக் கழகத்துக்கு வீடுகள் கட்டச் சிறிதளவு உதவியேனும் செய்யவில்லையென்று தோழர் அழகிரிசிங்கார நாயுடு கூறினார்.

சேரிகளைச் சீர்திருத்தும் வேலையை வீடு கட்டும் திட்டக்குழுவினர் முதலில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தோழர் கமலநாபம் கூறினார். நகரில் மொத்தம் 63 சேரிகள் உள்ளனவென்றும் அரசாங்கம், மூலதனமாகிய 36 கோடி ரூபாயிலிருந்தாவது, பொது ஜனங்களுக்காக ஒதுக்கியுள்ள ஒரு கோடி ரூபாயிலிருந்தாவது செலவு செய்து சீர்திருத்தம் செய்ய வேண்டியது மிக அவசியமென்று அவர் கூறினார்.

## பெல்ஜியத்தில் அமளி!

### முடியாட்சி எதிர்ப்புக் கிளர்ச்சி

பிரஸ்ஸல்ஸ், மார்ச். 22—
முடியாட்சி மீண்டும் பெல்ஜியத்தின் மீது சுமத்தச் சில மித்வாதிகளும் கட்சிகள் முயற்சிப்பதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் மக்கள் தீவிரக் கிளர்ச்சி ஆரம்பித்துள்ளார்கள். இப்பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு சமீபத்தில் நிர்வாகம் வகித்து வந்த மந்திரிசபை ராஜினாமா செய்துவிட்டது. எங்கும் வேலை நிறுத்தங்களும் ஆர்ப்பாட்டங்களும் வந்த கோத்திறுவை தோன்றலாமென்ற நிலை உண்டாயுள்ளது.

கத்தோலிக்க கட்சியைச் சேர்ந்த ஐஸ்கென்ஸ் என்பவர் மந்திரிசபை அமைக்க முடியாத காரணத்தால் வெளியேறிவிட்டார்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1